23.08.2022 அ.வ.எண்.8/2017 வா.சா.1

<u>பெயர்:-திரு.அமரன்</u>

சாட்சி ஆஜர், சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

<u>1-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>

1. வழக்கு சொத்து புஞ்சை புளியம்பட்டியில் உள்ள கரிவரதராஜ பெருமாள் கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. அரசுக்கு பாத்தியப்பட்ட புறம்போக்கு இடமாகும். கரிவரதராஜ பெருமாள் கோவில் அரசு புறம்போக்கில் உள்ளதா என்றால் ஆமாம். அரசு புறம்போக்கு சொத்தில் தனிப்பட்ட நபரோ தனிப்பட்ட சமுதாயத்தினரோ பொதுவாக எவ்வித உரிமையும் கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை பல வருடங்களாக நாங்கள் வழி வழியாக அனுபவித்து வருகிறோம். அரசு புறம்போக்கு சொத்தை தனிநபர் உரிமை கோர இயலும் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2. நான் வேட்டுவ கவுண்டர் சமுதாயத்தின் பரம்பரை அறங்காவலர் என்பதை காண்பிக்கும் விதமாக வழக்கில் குறிப்பிட்ட சங்கதிகளை வேறு ஆவணங்கள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. உள்ளது.1935-ம் வருடத்திய ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆவணத்தில் நான் சொல்வது போல் நானோ எனது தாத்தாவோ, அப்பாவோ வேட்டுவ சமுதாயத்தின் பரம்பரை அறங்காவலர் என்று குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளதா என்று ஆவணத்தை காண்பித்து கேட்ட போது என்னால் படித்து பார்த்து சொல்ல இயலாது என்று சாட்சியம் அளிக்கிறார். கரிவரதராஜ பெருமாள் கோவில் இந்து சமய அறநிலைய துறை கட்டுப்பாட்டில் உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் முதலில் வழக்கு தாக்கல் செய்யும் சமயம் இந்து சமய அறநிலைய துறையை கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

3. மேற்படி வழக்கு சொத்தின் பழைய புல எண்.428 என்றால் சரிதான். அதன் புதிய புல எண்தான் 349/2 என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்ணின் மொத்த விஸ்தீர்ணம் எவ்வளவு என்றால் சரியாக தெரியாது. மேற்படி சர்வே எண்ணில் கரிவரதராஜ பெருமாள் கோவில் எவ்வளவு விஸ்தீரணத்திலும் நந்தவனம்

எவ்வளவு விஸ்தீரணத்திலும் மடம் எவ்வளவு விஸ்தீரணத்திலும் அமைந்துள்ளது என்று குறிப்பிட்டு சொல்ல இயலுமா என்றால் மடமானது 61 அடி நீளம் 32 அடி அகலத்தில் அமைந்துள்ளது. நந்தவனம், கோவில் விஸ்தீர்ணம் பொறுத்து எனக்கு சரியாக தெரியவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் புல வரைபடத்தில் உள்ளவாறுதான் கோவில், நந்தவனம், மடம் ஸ்தலத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான்.

4. மேற்படி சொத்துக்களானது பழைய புல எண்.428-ல் அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி புல வரைபடமானது 1924-ம் வருடம் வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி புல வரைபடத்தில் நான் சொல்லும் மடமானது தென்கிழக்கு மூலையில் அமைந்துள்ளது என்றால் சரிதான். 1924-க்கு முன்பு இம்மடமானது நிலுவையில் இருந்த காரணத்தினால்தான் மேற்படி வரைபடமானது மேற்படி புல வரைபடத்தில் உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி புலவரைபடமானது பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி மடத்தை தவிர நான் வேறு எந்த கோவில்களுக்கு அறங்காவலராக உள்ளேன் என்றால் இரும்பறை கையிலாசநாதர் கோவில், ஓதிமலை ஆண்டவர் கோவிலுக்கும் பரம்பரை அறங்காவலராக உள்ளேன். மேற்படி கோவிலுக்கு என்னை பரம்பரை அறங்காவலராக நியமனம் செய்து இந்து சமய அறநிலையத்துறை ஆணை வழங்கி உள்ளதா என்றால் என்னுடைய பெரியல் எவ்வித ஆணையும் வழங்கப்படவில்லை. எனது தகப்பனார் பெயரில் ஏற்கனவே ஆணை வழங்கப்பட்டுள்ளது.

5. அதனடிப்படையில் நானும் அறங்காவலர் என்று விளம்புகை செய்ய விண்ணப்பம் கொடுத்துள்ளேன். கரிவரதராஜ பெருமாள் கோவிலுக்கோ அதனை சார்ந்த மடத்திற்கோ அறங்காவலராக என்னை நியமிக்க கோரி விண்ணப்பம் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. ஆனால் சமாதான பேச்சு வார்த்தைக்கு என்னைதான் அறங்காவலராக அழைப்பார்கள். மேற்படி கோவிலுக்கு சம்மந்தப்பட்ட அனைத்து சமுதாய மக்களையும் அழைத்துதான் சமாதான பேச்சு வார்த்தை நடத்தப்படும் என்றால் சரியல்ல. எங்களுடைய சமுதாயத்தையும்

ஒக்கலைய கவுண்டர் சமுதாயத்தையும் மட்டும் அழைத்து சமாதான பேச்சு வார்த்தை நடத்துவார்கள். காலம் காலமாக கோவில் சம்மந்தப்பட்ட பிரச்சனை ஏற்பட்டால் மேற்படி 2 சமுதாயத்தினரும் இணைந்துதான் பிரச்சனையை தீர்த்து கொள்வோம் என்றால் சரிதான்.

6. கோவிலுக்கு சொந்தமான சொத்தில் தங்களுக்கு சொந்தமான மடம் என்று தனித்து கட்டிகொள்வதற்கு மேற்படி சமுதாயத்திற்கு யாதொரு உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. எங்களுக்கு உரிமை கொடுத்துள்ளார்கள். அதனடிப்படையில்தான் கட்டப்பட்டுள்ளது. எங்களுக்கு உரிமை கொடுத்தவர்களுக்கு உரிமை இல்லாத நிலையில் நானும் 1935—ம் ஆண்டில் ஆவணத்தில் உரிமை கொடுத்தவர்களும் சேர்ந்து அந்த ஆவணத்தை உருவாக்கி கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. அதனால் மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் அறங்காவலர் உரிமையோ தர்மகர்த்தா உரிமையோ நான் கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல.

7. மேற்படி மடமானது 100 ஆண்டுகளுக்கு மேலாக உள்ளது என்று வழக்குரையில் குறிப்பிட்டுள்ள நிலையில் மேற்படி மடத்தை வெளியூரில் இருந்து வரும் பல்வேறு சமுகத்தை சேர்ந்த மக்கள் காலம் காலமாக தங்கி செல்வதற்கு பயன்படுத்தி வந்தார்கள் என்றால் சரியல்ல. எங்கள் சமுதாயம் மட்டுமே பயன்டுத்தும் மடம் ஆகும். எங்கள் சமுதாய மக்களுக்கு மட்டுமே மேற்படி மடமானது பாத்தியப்பட்டது என்பதை காண்பிக்கும் வகையில் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். 1980-ம் ஆண்டில் 1-ம் பிரதிவாதியின் தகப்பனார் ஆணையர் முன்பு மேற்படி மடமானது எங்கள் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்டது என்று வாக்குமூலம் கொடுத்துள்ளார். மேற்படி வாக்குமூலத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம்.

8. மேற்படி மடமானது வேட்டுவ கவுண்டர் சமுதாயத்திற்கு மட்டும் பாத்தியப்பட்ட மடம் அல்ல என்றும் வெளியூரில் இருந்து வரும் மற்ற சமூகத்தை சேர்ந்த நபர்களும் தங்கி செல்வதற்கு கட்டப்பட்ட மடம் என்றும், மேற்படி மடத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் மேற்படி மடமானது எங்கள்

சமுதாயத்திற்கு மட்டும் பாத்தியப்பட்ட மடம் என்று இவ்வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.11 ஆன ஆவணத்தில் உள்ள அசல் வழக்கு எண்.75/2000 வழக்கானது நொச்சி குட்டை ஊராட்சி தலைவரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரிதான். மேற்படி வழக்கானது கோவில் இடத்தில் தடம் செல்வதாகவும் மேற்படி தடத்தை பொது மக்கள் உபயோகிக்காத வண்ணம் கோவில் நிர்வாகம் தடுப்பதாகவும் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கானது 22.01.2003-ல் கோவிலுக்கு சாதகமாகவும் பஞ்சாயத்திற்கு எதிராகவும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி தீர்ப்பிற்கு எதிராக மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்துள்ளது.

9. மேற்படி மேல்முறையீடு சம்மந்தப்பட்ட ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், கீழமை நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவானது உறுதியாகி விட்டது என்றும் சொன்னால் சரியல்ல. கோவில் இடத்தில நொச்சி குட்டை பஞ்சாயத்து சார்பில் சமுதாய கூடம் கட்டப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். சட்டதிற்கு புறம்பாக கோவில் இடத்தை ஆக்கிரமித்து பஞ்சாயத்து சார்பில் சமுதாயகூடம் கட்டப்பட்டு விட்டதாக அசல் வழக்கு எண்.276/2000 தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கிறக்கு எதிராக கோவில் நிர்வாகத்தால் முதலாவது மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மேல்முறையீடானது தள்ளுபடி செய்யப்பட்டு சென்னை உயர் நீதிமன்றத்தில் இரண்டாவது மேல் முறையீடு எண்.821/2008 நிலுவையில் உள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது.

10. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 ஆன வரைபடத்தை வழங்குவதற்கான உரிமை நான் தாக்கல் செய்த எந்த ஆவணத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டது என்றால் 1935-ம் தேதிய வா.சா.ஆ.1 ஆன ஆவணத்தை தாக்கல் செய்ததன் அடிப்படையில் வழங்கப்பட்டது. வேட்டுவ சமுதாய கவுண்டர் மக்களது பரம்பரை அறங்காவலர் என்ற வகையிலோ அல்லது மடத்தின் தர்மகர்த்தா என்ற வகையிலோ

மேற்படி வரைபடத்தை வாங்கவில்லை என்றும், தனிப்பட்ட நபர் என்ற முறையில்தான் மேற்படி ஆவணத்தை பெற்றுள்ளேன் என்றும் சொன்னால் சரிதான்.

1-ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

(Sd)அமரன்

(Sd)Tmt.P.Sharmila, B.B.A., B.L.,
District Munsif,
Sathyamangalam.